**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 109/19**

**Deposition of Witnesses for PW1**

| Name | : | திருமதி.சத்யதேவி | Caste: |
|---|---|---|---|
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **27.09.2024.**

## முதல் விசாரணை

நான் தற்போது திருச்சி கள்ளக்குடி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 05.01.2015ம் தேதி திருவரம்பூர் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில இருந்தபோது கஞ்சா விற்பதாக எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி எடைகற்கள், தராசு ஆகியவற்றுடன், பெண். காவலர் புனிதவதி மற்றும் ராஜ்குமார் ஆகியோருடன் நவல்பட்டு ரோடு, சுருளிகோவில் தெரு சென்று கண்காணித்தபோது 61 வயது மதிக்கத்தக்க ரோஸ் கலர் கேரி பேக்குடன் நின்றுக்கொண்டிருந்தவர் தணிக்கை செய்தபோது, தன் பெயர் சின்னம்மாள், க/பெ.மாரிமுத்து என்றும் கையில் வைத்திருப்பது கஞ்சா என்றும் கூறியவரை, பிடித்து ரோஸ் கவரில் இருந்த கஞ்சா பொருளை எடை போட்டு பார்த்ததில் 1.100 கிகி கஞ்சா மற்றும் 500 ரூபாய் பணம் இருந்ததை பொது மக்கள் யாரும் இல்லாததால் காவலர்கள் மூலம் மகஜரில் 8.15 மணிக்கு கைப்பற்றி, சாம்பில் 50 கிராம் எடுத்து 05.01.2015 ம் தேதி தடய ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது. எதிரியை 8.45 மணிக்கு கைதுசெய்தோம். எதிரி மற்றும் கஞ்சாவுடன் 9 மணிக்கு நிலையம் வந்து கு.எண்.15/2015 சட்டப்பிரிவுகள் 8© r/w 20(b)(ii)(b) NDPS Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையை நீதித்துறை நடுவர் எண்.6, திருச்சி அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். கைதிற்கான அறிவிப்பு **அ.த.சா.ஆ.1** ஆகவும், முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.2** ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

முதல் தகவல் அறிக்கையில் எனக்கு எத்தணை மணிக்கு தகவல் வந்தது என்றும் எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்ற குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. மேற்படி விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. கைது அறிவிப்பு தயாரிக்கப்பட்டதாக முதல் தகவல் அறிக்கையிலோ, ஆய்வாளர் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி கைது செய்யப்பட்டது 8.45 மணி. கைது அறிவிப்பில் 8.15 மணிக்கு தயாரிக்கப்பட்டதாக உள்ளது.

மகஜர், முதல் தகலவ் அறிக்கை, கைது அறிவிப்பு ஆகியவை என்னால் தயார் செய்யப்பட்டது. மகஜர் சம்பவ இடத்தில் வைத்து 8.15 மணிக்கு எழுதப்பட்டது. மகஜரில் எதிரிகளிடம் கையொப்பம் பெறப்படவில்லை. கேரி பை கைப்பற்றப்படவில்லை. பணத்தின் டினாமினேசன் எனக்கு ஞாபகம் இல்லை. மகஜரில் 1.050 கிராம் கைப்பற்றப்பட்டதாக உள்ளது. மகஜரில் சட்டப்பிரிவுகள் மற்றும் கு.எண். குறிப்பிடப்பட்டுள்ளது. சுருளிகோவில் தெருவில் சுமார் 100 வீடுகள் மேல் உள்ளது. சம்பவ இடத்தில் குறிப்பிட்டு எந்த இடத்தில் வைத்து பிடித்தோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ரைடுக்கு எந்த வாகனத்தில்சென்றோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. கைப்பற்றுதல் மற்றும் கைதிற்கான அறிவிப்பு எதுவும் தயார் செய்து அனுப்பவில்லை என்றால் சரிதான். கைது குறிப்பாணை நான் தான் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன். கைப்பற்றப்பட்ட பொருள்கள் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சா"தான். நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் தகவல் வரவில்லை என்றும், சாட்சியங்களுடன் ரைடுக்கு சென்றதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் எதிரிகளிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், வழக்கு 1 முதல் 3 ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. உயர்அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.